
அவ்வை
புரடக்ஷன்ஸ்
ரத்த
பாசம்
டைரக்ஷன்: R.S. மணி

# ராணி

சாதாரண ராணியல்ல...நாட்டிய ராணி...சங்கீத ராணி......சாகித்ய ராணி......இன்னும் என்னென்ன ராணிகள் உண்டோ அத்தனை ராணியும் அவள் தான்......இந்த ராணிக்குத் தகுந்த ஒரு ராஜா கிடைத்தான். ராஜாதான் உலகம்......உலகம்தான் ராஜா. ஏழை தெரு நாட்டியக்காரி அவன் அன்பிலே இன்பத்தைக் கண்டாள்......களங்கமற்ற காதல் அவள் கருத்திலே மலர்ந்தது......சம்பிரதாயப்படி அவர்கள் காதலின் நடுவே புயல் வீசியது......மின்னல் மின்னியது......இடி இடித்தது......பிறகு அமைதி......காதல் நிறைவேறியது, ராணி காதல் இன்பத்தில் வாழ்ந்தாள்......

அனபு வாழ்ந்தது
பண்பு வாழ்ந்தது
இன்பமும் வாழ்ந்தது



# மது

சமூகத்திலே எத்தனையோ சூழ்ச்சிக் காரர்கள், சூது மதியினர் நிறைந்திருக்கிறார் கள்......அவர்களில் முதன்மை ஸ்தானம் வகிப்ப வன்தான் மது......

தன் சொகுசு வாழ்க்கைக்காகக் காதலியையே விற்கத் துணிகிறான்......மானமற்றவன். லட்சாதிபதி ரகு அவன் கைகளிலே சிக்கினான்......காதலி கைமாறி னாள். காரியம் கை கூடியது. தான் நினைத்த படி யெல்லாம் வாழ்ந்தான். ஆனால், முட் டாள்.......அந்த வாழ்வையே சாஸ்வதமென்று எண்ணிவிட்டான். அக்ரமத்தின் உச்சியையே அடைந்து விடுகிறான். அங்கிருந்து மேலும் உயரே போக ஆசை......முயல்கிறான்....... முடிவு ?......அதல பாதாளத்தில் தலை கீழே விழுகிறான்......சாவுமணி......

**வஞ்சகத்திற்குச் சாவுமணி**
**சூழ்ச்சிக்கும் சூதுக்கும் சாவுமணி**



## ரத்த பாசம்!

நல்ல நெறிகளையெல்லாம் நல்ல முறையிலே நவிலும் ஒரு நல்ல கதை!

## ரத்த பாசம்!

பாழ்பட்டுக் கிடக்கும் பழமை உயர்வுகளுக்குப் புதுமெருகூட்டி வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம்!!

## ரத்த பாசம்!

போலி வாழ்க்கை நடத்தும் அந்தஸ்துக்காரர் களுக்கு ஒரு அணுகுண்டு!!!

## ரத்த பாசம்!

கொண்டவளைக் கைவிட்டுக் கண்டவளுடன் கூடிக்குலவும் கயவர் கும்பலுக்கு ஒரு கசையடி!!!!

**ஷண்முகம், பாலையா, பகவதி,**
**அஞ்சலி, திரௌபதி, வித்யாவதி**
**முதலியோர் நடித்தது**

பம்பாய் நகரத்தின் அற்புதக் காட்சிகள்
படத்திலே ஒரு புதுமை!

கதை வசனம் **ஸ்ரீதர்**

டைரக்ஷன் **R. S. மணி**

ஸ்டுடியோ **நெப்ட்யூன்**

Shanti Press, Madras-1

## ர கு

மனிதன் பிறக்கும்போது யோக்யனாகத்தான் பிறக்கிறான். ஆனால், அவன் வாழ்க்கையில் எதிர்ப்படும் மனிதர்களுடைய சுபாவத்திலே சிக்கி அயோக்யனாக மாறிவிடுகிறான்......அப்படி மாறியவன்தான் ரகு

அன்பு மனைவியையும் ஆசைக் குழந்தையையும் மறந்துவிட்டுக் காசை விரும்பும் ஒரு வேசையின் பின்னால் திரிகிறான்......இந்தப் போலி வாழ்க்கையிலே நிலை தடுமாறிக் கொண்டிருந்தபோதுதான் நாடோடியான தன் ஏழைத் தம்பியைச் சந்திக்கிறான், தான் பணக்காரன்; தம்பி ஏழை......அந்தஸ்து தம்பியை அணைத்துக்கொள்ளத் தடையாக இருக்கிறது. ரத்த பாசம் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிகிறது......அந்தஸ்துக்கும் பாசத்துக்கும் போராட்டம்...கடைசியில் அந்தஸ்து தோல்வி அடைகிறது......தோல்வி...

ஆடம்பரத்திற்குத் தோல்வி
அயோக்யத்தனத்திற்குத் தோல்வி
போலி வாழ்க்கைக்கும் தோல்வி





## சரளா

மணவாளன் அன்பே நிலை
யான இன்பம் என்று மாருத எண்
ணங் கொண்டவள் மங்கையர்க்கரசி
சரளா. கணவனின் சுகமே தன் சுகம்...
அவன் வாழ்வே தன்வாழ்வென்று பெண்
மைக்குரியபண்பாடுகளோடு வாழ்ந்துவந்தாள்.
ஆனுல், அவள் கணவன் அவளை அலட்சியம் செய்
தான். நிர்க்கெதியாக்கிஞன் கற்பரசி மனம்
தளரவில்லை......சாவித்திரி சத்தியவானின்
உயிரை யமனிடமிருந்து மீட்டதுபோல சமுதாய
எமன்கள் விரித்த சூழ்ச்சி வலையிலிருந்து சரளா
தன் கணவனை மீட்கப் பாடுபட்டாள்...அதற்காக
அனுபவித்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.
மனைவியென்ற உரிமையைக் கைவிட்டாள்.மணு
ளன் என்ற உறவையும் மறைத்தாள். ஒண்ட
வந்த பிடாரிக்கு ஊழியமும் செய்தாள்.
முடிவில் கணவனைக் காப்பாற்றத் தன் உயி
ரையே தியாகம் செய்யமுன் வந்தாள்...
வென்ருள்......வெற்றி......

**கற்பின் வெற்றி**
**உண்மையின் வெற்றி**



## ராஜா

ராஜா ஒரு நாடோடி. ஜோப்படி செய்வது அவன் தொழில். சமூகத்திலே அவனுக்குத் திருடன் என்ற பட்டம்......ஆம்; திருடன்தான்!......அவன் இதயத்திலே இரக்கம் இருந்தது......அன்பு இருந்தது......மனிதத்தன்மை இருந்தது......

லட்சியமற்ற அவன் வாழ்விலே காதலும் கடமையும் குறுக்கிட்டன. காதலுக்காக வாழ்ந்தான். கடமைக்காகப் போரிட்டான்.

அந்தப் போராட்டத்திலேதான் லட்சாதிபதியான தன் அண்ணனைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தஸ்தின் பேரால் அண்ணன் செய்யும் அக்ரமங்களைக் கண்டு எரிமலையெனக் குமுறினான். அண்ணனைத் திருத்துவதே லட்சியமாகக் கொண்டான். அதனால் அவன் அடைந்த துன்பங்கள் பல......இறுதியில் வெற்றிப்பாதையிலே காலடி வைத்தான்......வெற்றி......

**காதலில் வெற்றி**
**கடமையில் வெற்றி**
**லட்சியத்திலும் வெற்றி**

## மனோரமா

கண்களிலே காதல்......கருத்திலே காமம்......முகத்திலே முறுவல்......அகத்திலே ஆலகால விஷம்......நாவிலே நயமான வார்த்தைகள்......நெஞ்சிலே வஞ்சக எண்ணங்கள்......இவள் தான் மனோரமா.

நாளுக்கு ஒரு புடவையை மாற்றுவதுபோல் புருஷனை மாற்றுவதில் கைதேர்ந்தவள். அவள் விரித்த வலையிலே சிக்கியவர்கள் பலர். ஒழுக்கத்தைக் கண்டு அவள் சிரித்தாள். பண்பாடு பணம் தராதென்பது அவள் சித்தாந்தம். எனவே பண்பாட்டைக் கண்டு சிரித்தாள். சத்தியம் சல்லாப வாழ்வைத் தராதென்பது அவள் தீர்ப்பு. ஆகவே, சத்தியத்தைக் கண்டும் சிரித்தாள்......ஆனால், அவள் உயரவில்லை. பணத்திலே அமைதி பெறவில்லை. சல்லாப வாழ்வு சாஸ்வதமாகி விடவில்லை...... சாவின் மடியிலேதான் விழுந்தாள்......இப்போது?......

சத்தியம் அவளைக் கண்டு சிரித்தது.

பண்பாடு சிரித்தது

ஒழுக்கம் சிரித்தது



# ஸ்ரீமீனாட்சிடாக்கீஸில்

18-9-54 சனிக்கிழமை முதல்

6-வது வாரம் இப்பொழுது நடைபெறுகிறது



அவ்வை புரொடக்ஷன்ஸ்

# ரத்தபாசம்

அவ்வை புரொடக்ஷன்ஸ் அளிக்கும்

# ரத்த பாசம்

நடிகர்கள்

| | | |
|---|---|---|
| டி. கெ. ஷண்முகம் | ... | ராஜா |
| டி. எஸ். பாலையா | ... | மது |
| டி. கெ. பகவதி | ... | ரகு |
| பி. எஸ். வெங்கடாசலம் | ... | ராணி தகப்பனுர் |
| எம். எஸ். கருப்பையா | ... | நந்தி |
| டி. எஸ். தட்சணுமூர்த்தி | ... | வேலையா |

நடிகைகள்

| | | |
|---|---|---|
| அஞ்சலிதேவி | ... | ராணி |
| எம். எஸ். திரௌபதி | ... | சரளா |
| என். ஆர். வித்யாவதி | ... | மனோரமா |

மற்றும்

எஸ். ஜி. சுப்பையா
கே. ஆர். சீதாராமன்
டி. ஏ. காசிநாதன்
என். ஆர். ராமலிங்கம்
எம். கே. ராமலிங்கம்
டி. எம். சுப்பையன்
டி. எம். கோபால்
டி. ஆர். பி. ராவ்
எம். கிருஷ்ணமூர்த்தி
சுதாகர்
எம். ஆர். ராஜரத்தினம்
எஸ். வி. ஆறுமுகம்
பி. ஏ. சொக்கலிங்கம்
டி. வி. ஷண்முகம் பிள்ளை
ஜி. எம். தங்கப்பன்
கே. சாமிராம்
எம். கருப்பையா
கே. கோவிந்தசாமி
குண்டுமணி

முதலியோர்

| | | |
|---|---|---|
| கதை-வசனம் | ... | ஸ்ரீதர் |
| ஒளிப்பதிவு | ... | நிமாய் கோஷ் |
| ஒளிப்பதிவு உதவி | ... | சி. ஆர். சீதாபதி<br>எம். விஸ்வநாத ராய் |
| ஒலிப்பதிவு: பாடல்கள்<br>பின்னணி சங்கீதம் | ... | ஏ. கோவிந்தசாமி |
| ஒலிப்பதிவு உதவி | ... | பி. எஸ். நரசிம்மன் |
| ஒலிப்பதிவு | ... | விஸ்வநாதன் |
| ,, உதவி | ... | எம். வி. சங்கர்<br>நாட் சுப்பராவ் |
| எடிட்டிங் | ... | கே. கோவிந்தசாமி |
| உதவி | ... | எம். ஜகன்னாதன் |
| காட்சி உருவகம் | ... | ஏ. கே. சேகர் |
| காட்சி அமைப்பு | ... | எஸ். ரெங்கசாமி |
| பின்னணி காட்சிகளும்,<br>வர்ண ஓவியங்களும் | ... | வி. எஸ். ராவ் |
| ஸ்பெஷல் மேக்கப் | ... | ஹரிபாபு |
| மேக்கப் | ... | ராமச்சந்திரன் |
| உதவி | ... | பத்மநாபன்<br>சுந்தரேசன்<br>ஷண்முக முதலியார்<br>சந்தானம் |
| பாடல்கள் | ... | ம. கி. ஆத்மநாதன்<br>கு. மா. பாலசுப்பிர<br>மணியன் |
| இசையமைப்பு | ... | ம. கி. ஆத்மநாதன்<br>ஏ. வி. நடராசன் |

| | | |
|---|---|---|
| நடன அமைப்பு | ... | ஹீராலால்<br>குமார்<br>மாதவன் |
| உடை | ... | சி. கே. ராஜமாணிக்கம்<br>டி. ஏ. மோதி |
| உதவி | ... | சி. கே. ஹரி |
| ஸ்டில்ஸ் | ... | ஆர். என். நாகராஜ ராவ் |
| உதவி டைரக்ஷன் | ... | சேகர் |
| புரொடக்ஷன் மானேஜர் | ... | கே. எஸ். அர்த்தநாரி |
| செட்டிங் உதவி | ... | வி. பாலகிருஷ்ணன் |
| செட் கவனிப்பு | ... | ஆர். என். ராவ்<br>சி. சி. அனந்தப்பன். |
| லேபரடரி | ... | ஜுபிடர் லாபரடரி<br>அடையார் |

ஸ்டுடியோ

**நெப்டியூன் ஸ்டூடியோ,** அடையார்

தயாரிப்பு

**டி. கெ. முத்துசாமி**

டைரக்ஷன்

# ஆர். எஸ். மணி

# ரத்தபாசம்

## கதைச் சுருக்கம்

நாடோடியாக, பம்பாய் நகரிலே திரிந்துகொண்டிருந்தான் ராஜா. நான்கு மூலைச் சந்திகளிலே நாட்டியமாடிப் பிழைத்து வந்தாள் ராணி. வாழ்க்கைச் சந்தையிலே இருவரும் சந்திக்கின்றனர். கருத்து ஒத்தது; காதல் மலர்ந்தது.

சென்னையில் தரித்திரத்தின் நிழலே படாமல் உல்லாச மாளிகையில் அழகு மனைவியோடும், ஆசைச் செல்வனோடும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தான் "சுபீரியர் சைககிள் கம்பெனி" முதலாளி ரகு.

தன் கிளைக் கம்பெனியைப் பரிசீலனை செய்ய ரகு பம்பாய புறப்படுகிறான். அவன் மனைவி சரளா அவனுக்கு பிரியா விடை கொடுக்கிறாள்.

மது கிளைக் கம்பெனியின் மானேஜர். சூழ்ச்சியே உருவான எத்தன். பல ஆயிர ரூபாய்களை கம்பெனியிலே கையாண்டிருக்கிறான். எனவே, தன் தவறு வெளியாகாமலிருக்க காதலி மனோரமாவை சதிக்கு உபயோகப்படுத்துகிறான். மானத்தை விற்றுப் பிழைப்பு நடத்தும் சாகசக்காரி மனோரமா. அவள் விரித்த மாய வலையிலே சிக்குகிறான் ரகு. அதன் பலன்......!

சென்னை கம்பெனி விற்கப்படுகிறது. ரகுவின் மனைவியும் மகனும் அனாதையாக்கப்படுகின்றனர்.

நிலைமை அறிந்து துடிக்கிறாள் சரளா. கற்புக்கரசிகளின் கால்சுவட்டைப பினபற்றி, கருத்திழந்த கணவனையடைய முடிவு செய்கிறாள். குழந்தையோடு புறப்படுகிறாள் பம்பாய்க்கு.

ஒருநாள் ராஜா ரகுவிடம் 'பிக்பாக்கட்' அடிக்கிறான். கிடைத்த வருமானத்தைக் கணக்கிடும்போது அதில் சில புகைப்படங்களைக் காண்கிறான். இறந்தகால வாழ்க்கை அவன் கண் முன்னே தோன்றுகிறது. ரகு தன் சொந்த சகோதரன் என்பதை உணர்கிறான்.

சகோதரர்கள் சந்திக்கின்றனர். ரகு ராஜாவைப் புரிந்து கொண்டு தடுமாறுகிறான். பாசம் அவனை அணைத்துக்

கொள்ளத் தூண்டுகிறது. அந்தஸ்து அதற்கு அணை போடுகிறது. அறிந்தும் அறியாதவனைப் போல் நடந்து கொண்ட அண்ணனிடம் ராஜாவும் உண்மையுணராதவனைப் போலவே நடிக்கிறான்...

ராஜாவிற்கு மற்றுமோர் சோதனை. அனாதையாக பம்பாயில் திரியும் அண்ணியைச் சந்திக்கிறான். அவளுக்கு ஆறுதல் கூறி அவள் புருஷனோடு அவளைச் சேர்த்து வைபபதாக வாக்குறுதி தந்து தன் வீட்டிற்கு அழைத்து வருகிறான். தன்னை யாரென்று மட்டும் காட்டிக்கொள்ளவில்லை.

அண்ணிக்காக அண்ணனோடு வாதாடுகிறான். சகோதரர்களுக்குள் சந்திப்புகள் பல நிகழ்கின்றன. ஆனால் நிலைமையில் மட்டும் மாறுதல் ஏற்படவில்லை. பாசமும் அந்தஸ்தும் போரிடுகிறது. வெற்றி அந்தஸ்திற்கே. ரகு மன அமைதியை இழக்கிறான்.

மதுவும் மனோரமாவும் ராஜாவை ஒழிக்கத் தீர்மானிக்கின்றனர். மாறுதல்கள் பல நிகழ்கின்றன. சரளா விபசாரி என்று பட்டம் சூட்டப்பட்டு ராஜாவோடு வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறாள்; துடிக்கிறாள் சரளா. சிந்திக்கிறான் ராஜா.........முடிவு.........?

சரளா ரகு வீட்டிலே மனோரமாவின் வேலைக்காரியாக்கப்படுகிறாள். ராஜாவிற்கு முதல் வெற்றி.

ராஜா ராணியைச் சந்தித்து ஒரு நகையைப் பரிசளிக்கிறான். ராணி வெறுத்து அவன் காலைப் பிடித்துக் கொண்டு திருட்டுத் தொழிலை விட்டுவிடும்படி கெஞ்சுகிறாள். காதல் ராணியின் கருத்துரையிலே ராஜா திருந்துகிறான். திருடிய இடத்திலே மாலையை வைக்கும்போது போலீசில் மாட்டிக்கொள்கிறான்...சிறை.

நாட்கள் நகர்கின்றன. மதுவும் மனோரமாவும் ராணியை ஏமாற்றி அழைத்து வந்து ரகுவிடம் சிக்க வைத்து விட்டு வெளியேறுகிறார்கள்!......ராஜா சிறையில்!... ராணி வெறி கொண்ட ரகுவிடம் தனிமையில்!.........சரளா திக்கற்ற நிலை!......வஞ்சகர் வாழ்வு வளம் பெற்றதாகப் பூரிக்கின்றனர்!.........முடிவு?............

பாடியவர் : பி. லீலா

## ராணி

ஓ என் ராஜா! வா என் ராஜா!
உனது காதலால் மனது வாடுதே (ஓ)

அன்னம்போலொரு சின்னப்பொண்ணு ஆடுது பாருங்க
சொகுசா ஆடுது பாருங்க
கண்முன்னாலே தானுங்க காசுபணம் போடுங்க
ஜிலுகுஜிலுகு ஜில் ஜிலுகு ஜிலுகு ஜில்
ஜிலுகு ஜிலுகு ஜில் ஜிலு ஜிலு—ஹை—ஜிலுஜிலு...
வெரிகுட்......

வெள்ளைக்காரன் பிள்ளைபோல வேஷம்போட்ட ராஜா
ஓ ராஜா—காசுபோடு ராஜா
போடாமே—போகாதே ராஜா
நீ ஒரு காசு போடு ராஜா......

பொம்பிளைங்க கட்டிக்கிற புடவைத் துணியிலே
புஷ்கோட்டு போட்டிருக்க ஆம்பிளே
ஏ ஆம்பிளே
என்ன பொம்பிளே
மூணு காசு போடு......என்ன முழிக்கிறே?
ஐ ஆம் சாரி
ப்பூ—இம்புட்டுத்தானா,
வெம்போட்டு மைனருக்கு இங்கே என்னாவே ஐ
வேர் ஈஸ் யுவர் மூளை?
என்னாது?......

மண்ணுங்கட்டி......ஆளைப்பாரு ஆளை......ஒரு
தம்பிடியும் இல்லாத எம்ப்டீ மணிபர்ஸு—
டம்பாச்சாரிதானு ?—உனக்கு இந்த
ஜம்பம் எதுக்கு ? வேணும்......

அன்னக்காவடிங்களுக்கு ஆடம்பரம் மூஞ்சியைப்பாரு......
சொல்லாமே போகாதே பாபுஜி
தொந்திக்கார லாலாஜி—க்யோ
மேரா சூரத் அச்சா நஹீக்யா
துமாரா சூரத் படே குஷீஹை
ஏக் ரூப்யா தாலோஜீ......
ஏக் பைசாபீ நஹீஹை ப்யாரீ......
அரே க்யாஜீ......

செல்லாத காசும் இல்லேண்ணு சொல்லுறே
எல்லாம் தெரியுது கில்லாடி ராஜா— (சொல்)

ஜாக்ரதை ஜாக்ரதை......
ஸைடு பாக்கெட்டு ஆசாமிகளே (ஜாக்ரதை)

பாட்டைக் கேட்டு நீங்க மனசை
பறிகொடுத்தாப்போல—உங்க
பவுண்டன்பேனு மணிபர்ஸெல்லாம்
பறி கொடுக்காதீங்க.........உங்க

பாக்கெட்டை பத்திரமா பாருங்க—ஆமாங்க ஸைடு
பாக்கெட்டை பத்திரமா பாருங்க.........

பெரிய மனுஷன் போலிருப்பாங்க
பிட்நோட்டீஸ் பேர்வழிங்க
வெரி நைஸா பிக்பாக்கெட்
வேலே செய்வாங்க—ராஜா...... (பாக்கெட்)

ஜாக்ரதை ஜாக்ரதை—ஜாக்ரதை......

பாடியவர்—எம். எல். வசந்தகுமாரி.

## சரளா

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

### பல்லவி

நிலையான இன்பம்—மணவாளன் அன்பே
இலையேல் அதுவே துன்பம்—உலகிலே (நிலை)

### அநுபல்லவி

மலைபோல செல்வம் பலகோடி வந்தாலும்
உலகாளும் மகராணி எனும் பேறிருந்தாலும்
மணவாளன் அன்பே (நிலை)

### சரணங்கள்

ராகம்: சாரமதி

மலரும் மணமும் போலே—அன்புணர்வாலே
எளிமை நிலைதனிலும்—பாரில்
இணையாக வாழ்வதே இன்பமென் தோழி—
மலரும் மணமும் போலே......

பாடியவர்: ஜிக்கி

## மனோரமா

லாலலா லலா.........லாலலா லலா............
மாமோகம் ஆனேன்......
மாமோகம் ஆனேன்.........மாமோகம் ஆனேன்
மாமோகம் ஆனேன்......
இதயமதனு—தினமுன் நினைவே
என் மனமே மயங்கிடுதே
வாராயோ மாரா...... (மாமோகம்)

அழகான வானம் தனிலே உலாவும்
நிலவாகும் எந்தன் முகமே
மருமாசிலாத மணமேவு சோலை
மலராகும் எந்தன் உருவே......... (மாமோகம்)

கனிதேனிதழ் புரியும் நகையால்
ஒளிமேவிடும் சிறுவேல் விழியால்
மன சோபித அழகால்—உலகையாளுவேன்
வசந்த மோகினியாளென்—மனதுனை நாடுதே

அழகான வானம் தனிலே உலாவும்
நிலவாகும் எந்தன் முகமே
மருமாசிலாத மணமேவு சோலை
மலராகும் எந்தன் உருவே......
லாலலா......... (மாமோகம்)

பாடியவர்கள்: ராணி, காந்தா, கோஷ்டியார்.

## பெண்கள் கூட்டப்பாடல்

ஆனந்த வைபோகம்—பேரானந்த வைபோகம்
ஆசை மேவும் மன மோகன் பிறந்த நாளிதே சுபநாளிதே
நேசமாக நாம் எல்லோரும் கொண்டாடவே
சுபநாளிதே (ஆனந்த)

தீபாலங்காரங்கள் செய்யணும்
சீராகவே வெகு ஜோராகவே
செல்வன் பிறந்தநாள் கொண்டாடணும்
ஆமா கொண்டாடணும்

சிறு விழிக்கு மை தீட்டு
சிங்கார அணிகள் பூட்டு
மருமாசில்லா வதனம் தனிலே
வண்ணத்திலகம் வையடி தங்கம்

தலைவாரி பூச்சூட்ட வேணும்—கால
தாமதம் செய்யாமல் வாடி மெஞ்ஞானம்......
மா—விலை தோரணம் கட்டு தாத்தா—நீ சென்று
விரைவாகக் கோலங்கள் போடடி சீதா

சுந்தர மோகனை வாழ்த்துங்கடி—நல்ல
சோபன கீதங்கள் பாடுங்கடி
துன்பம் அழிந்து நல் லின்பம் விளைந்து
சுகம் பெற வேணுமென் றுடுங்கடி......

பாடியவர் : திருச்சி லோகநாதன்.

ராஜா

டல்லு டல்லு டல்லு—வெரி
டல்லு டல்லு டல்லு—வெரி வெரி— (டல்லு)

நல்ல முறையிலே நடந்த பிசுனசு எல்லாம் சீர்கெட்டு—நம்ம
நாட்டிலே இப்போ பார்க்கப்போறு மணிமார்க்கட்டு
வெரி டல்லு (டல்லு)

பரம்பரைப் பணமுதலாளி முகத்தைப்
பாத்தா தெரியுது டல்லு—அவங்க
பாங்க் பாலன்ஸ¬ நில்லு—சொந்த
பங்களா கடனுக்குச் செல்லு—வெள்ளிப்
பாத்திர பண்டம் பட்டுப்புடவை
பவுனு வயிரக்கல்லு—சேட்டு
பனியா கடையின் பில்லு—உருவில்
பறந்து வந்து பாழாப்போவுது
பகட்டு எங்கே சொல்லு—வெரி (டல்லு)

மேனிமுழுவதும் தங்கம் வயிரம் பூணுவதெல்லாம்
போச்சு—வெளி
வேஷம்போட ரோல்டுகோல்டு இல்ட்டு நகை வந்தாச்சு
ஆணும் பெண்ணும் போலிகளுக்கு அடிமையாகலாச்சு—
சிப்ரேட்
ஆடம்பரங்கள் செய்துகொள்ளவும் ஏற்றதாகிப்போச்சு—
உலகம் (டல்லு)

கண்ணாடி முத்துமாலை கழுத்திலே—இமிடேஷன்
கல்லுப் பதித்த வெள்ளிக்கம்மல் காதிலே—
இடையிலே
கட்டுவதெல்லாம் டேப்ளிகேட்டு சேலை—தலையிலே
கலரு பூசிய காகிதப் பூஞ்சோலை.........

நாகரீகத்தின் பேராலே—காலம்
மாறிப் போனதினாலே—யம்மா— (டல்லு)

முகத்துக்குப் பவுடர் உதட்டுக்குச் சாயம் மூக்குக்கண்ணாடி
மாட்டி
முடிசூடாத மகாராணிபோல் நடக்குறா சிமாட்டி—ப்யூட்டி
சிமாட்டி கையிலே ராட்டினமாடும் சிங்காரப் பையி—
ப்ளாஸ்டிக்—அதைத்
திறந்து பாத்தா பணங்காசில்லே சீப்பு கண்ணாடி
லிப்ஸ்டிக்—சுனோ பேஸ்பவுடர் க்ரீம் ஐடெக்ஸ்

ஒரிஜினல் எல்லாம் டல்லு—உலகம்
உண்மையிலே வெரி டல்லு—பகுத்
தறிவும் டல்லு—கலையும் டல்லு
அல்டாப்பு மைனர்கள் ஹம்பக் வேலைகளும்
(டல்லு)

பாடியவர் : ராதா ஜெயலட்சுமி.

## பின்னணி

கண்:—காணும் காட்சியே இன்பமா?—மனதால்
காண்பதே அழிவிலா இன்பமா?...... (கண்)

வண்ணமயில் தானிருந்தும்
வான்கோழி யுடனே
மதனலீலை யாடி
வாழ்வதே இன்பமா?

அலையுலாவும் கடலினிலே
ஆசைத் தென்றல் காற்றினிலே
நிலையிலாத ஓடத்திலே
நினைவிழந்து செல்வதே இன்பமா?.........

கண்ணிலாதவன் கலைக்குகையிலே
காணும் அழகெதுவோ?.........
உண்மையுணர்ந்தும் வழிதடுமாறி
ஓடி அலைவதுவோ?.........

பாடியவர் : ஏ. எம். ராஜா

## பின்னணி

எங்கே செல்வாயோ?—உலகில்
இன்பம் காண்பாயோ? (எங்கே)

கண்ணீர் சொரிந்து நீ கதறிய போதும்
காண்பவர் இங்கேதடா?.........
அன்னையைப் போலே உன்னை உலகிலே
ஆதரிப்பார் யாரடா? (எங்கே)

ஒருதாய் வயிற்றிலே பிறந்த சோதரன்
உறவை முறித்தனனே.........
அருமைத் தந்தையும் அன்பையிழந்துமே
அறவே வெறுத்தனனே...... (எங்கே)

மேவும் துயரினுல் மேதைகளெல்லாம்
வீழும் காலம் பாரடா.........
கூவத் தெரியா குயில் குஞ்சு நீயே
வாழ வகை ஏதடா.........

(நாடோடிக் கூட்டம்)

ஓ—லம்பா—லம்பா ஓ—லம்பா—லம்பா
நல்லா வாழ வகையில்லாதவங்க
நம்ம கூட்டத்துக்கு வாங்க வாங்க
நம்ம கூட்டத்துக்கு வாங்க

பாடுபடவே தேவையில்லே
பஞ்சம் பட்டினி இங்கேயில்லே
பணங்காசுக்கு கவலையுமில்லே
படாடோபத்துக்கு குறைச்சலுமில்லே
ஓ......லம்பா......லம்பா......

பாடியவர்: ஏ. எம். ராஜா

ரகு மனம்

(நொகையரு)

பாதகம் செய்வதும் ஏனோ—ரத்த
பாசம் அழிப்பதும் ஏனோ
நீதியைக் கொல்வதும் ஏனோ—துணை
நேசம் மறப்பதும் ஏனோ......

(பாட்டு)

உடன் பிறந்தவன் எனும்
உணர்வு தேய்ந்ததோ?.........
ஒரு சிறிதும் எண்ணாத
நிலைவந்ததும் ஏனோ?.........

அதுவே அந்தஸ்து மோகம்.........
அதுவே அந்தஸ்து மோகம்.........

பாடியவர்: ஏ. எம். ராஜா

ரகு

ஆ.....................
மனமே என்ன செய்தாய்?
மனமே என்ன செய்தாய்?

அறிவிழந்து செய்த உன்
செயலின்கொடுமை எண்ணி
அனல் மெழுகாய் உருகி—நீ
கலங்குவதும் ஏனோ?.........

அதுவே ரத்த பாசம்
அதுவே ரத்தபாசம்

பாடியவர்: பி. லீலா

## ராணி

பணமிருக்கிற மனுஷங்கிட்ட மனமில்லே—நல்ல
குணமில்லே—நல்ல
மனமிருக்கிற மனுஷங்கிட்ட பணமில்லே

மாடிமேலே மாடியுண்டு
வாசக்காக்க நாயுமுண்டு—அடிமை
வேலேக்கிப் பலபேருண்டு
விதவிதமாக் காருண்டு—எல்லாம் இருந்தும்
(பணம்)

பசியிருக்கிற மனுஷனுக்குச் சோறில்லே—இங்க
சோறில்லே—கையிலே
பசையிருக்கிற மனுஷனுக்குப் பசியில்லே—வயத்துப்
பசியில்லே

மண்ணை வெட்டிப் பொன்னெடுத்து
மலையை வெட்டி மணியெடுத்து
கல்லுடைச்சு—கைத்தறிநெஞ்சு—விறகுக்
கட்டைவெட்டி ரிக்ஷா வண்டியிழுத்து
அலுத்துப்போன (பசி)

பாடுபடும் உழவனுக்கு நிலமில்லே—காணி
நிலமில்லே—அதைத்
தேடிவைச்ச சீமான் உடம்பு வளையலே......
உலகம்போற போக்கு ஒண்ணும் சரியில்லே—நிலைமை
சரியில்லே—இதை
ஒழுங்கு பண்ணி அமைச்சுக்கிட்டா அழிவில்லே—
ஏதும் அழிவில்லே......... (பணம்)

பாடியவர் : எஸ். ஸி. கிருஷ்ணன்

## ந ந் தி

ஐயப்பா இது மெய்யப்பா
அஞ்ஞானம் கொண்டார்க்கு
மெஞ்ஞானம் பொய்யப்பா— (ஐயப்பா)

ஊரார் சொத்தைக் கொள்ளையடிச்சு
உடம்பை வளப்பாங்க--உழைக்காமே உல்லாசம்
தேடுவாங்க—
பணப்பேராசையாலே மானம் வெட்கம் விட்டுப்
பெண்களைக் காட்டுவாங்க—குல்லாப்போட்டு
பிழைப்பு நடத்துவாங்க—கௌரவப்
பிச்சையெடுத்துக் காலம் கழிப்பாங்க
பெரிய மனுஷன்போல காட்சியளிப்பாங்க
(ஐயப்பா)
காசு பணக்கார ஆசாமியைப் பார்த்துக்
கண்ணுலே வலைவீசிப் புடிப்பா—கன்னிப்
பொண்ணுளைப்போலவே நடிப்பா
ஆசைத்துரையே மம்முத ராசா மந்திரியின்னு
ஆடிப்பாடிக் கொஞ்சிச் சிரிப்பா—கையிலே
ஆப்புட்டதை யெல்லாம் பறிப்பா
அழகாக் கொளச்சு நாமத்தைப் போட்டு
அன்னக் காவடிங்களாக்கி விரட்டுவா— (ஐயப்பா)
முயலுக்கு மூணு காலுண்ணு சொன்னாலும்
மூச்சுக்கு முந்நூறு டேப்புகள் விட்டாலும்
முதலாளிச் சாமிக்கி ஆமாஞ்சாமி போட்டு
முகஸ்துதி செய்யவும் தெரியணும்—அதுக்கு
மூளையும் கொஞ்சம் இருக்கணும்—இங்கே
மூளையும் கொஞ்சம் இருக்கணும்—சாமி (ஐயப்பா)



எமது அடுத்த தயாரிப்பு
பழயனூர்
நீலி
கதை: அரு. ராமநாதன்